

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 25-02-2025

# ஜகதீப் தன்கரே எச்சரிக்கிறார்

இந்தித் திணிப்பை அரசியல் காரணங்களுக்காக நாம் எதிர்ப்பதாகச் சிலர் உளறிக் கொண்டிருந்தபோது அவர்களுக்கு பதில் சொல்லும் வகையில் துணைக் குடியரசுத் தலைவர் ஜகதீப் தன்கரே பேசி இருக்கிறார். தமிழ்நாட்டு மக்களுக்கு மொழியின் பெருமையையும் அருமையையும் சொல்லி எச்சரிக்கிறார் தன்கர்.

டெல்லியில் 98 ஆவது அகில பாரதிய மராத்தி சாகித்திய மாநாடு நடைபெற்றுள்ளது. இதில் கலந்து கொண்டு உரையாற்றி இருக்கிறார் இந்திய நாட்டின் துணைக் குடியரசுத் தலைவர் ஜகதீப் தன்கர் அவர்கள். மாநிலங்களவை அவைத் தலைவர் அவர். அவரைப் பற்றி அதிகம் அறிமுகம் செய்யத் தேவையில்லை. அந்த மாநாட்டில் ஜகதீப் தன்கர் ஆற்றிய உரையின் சில வரிகளை வாசியுங்கள்...

**“ஒரு நாடு, அதன் கலாச்சார வளம் மற்றும் கலாச்சாரப் பண்பாடுகளால் வரையறுக்கப்படுகிறது. நமது முன்னோர்கள் நமது கலாச்சாரத்தையும் மொழிகளையும் வளர்த்தனர். அதே வழியில் வளர்ப்பது நமது கடமை. இலக்கியத்தை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் கைகோத்துச் செயல்படுவதன் மூலம் மட்டுமே இதைச் செழிக்கச் செய்ய முடியும். ஒரு வட்டாரத்தை (பிராந்தியத்தை, மாநிலத்தை) வீழ்த்த வேண்டுமானால் அதைக் கைப்பற்ற வேண்டியதில்லை. அந்த வட்டாரத்தின் மொழியை அழிப்பதுதான் சிறந்த வழி. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் நுழைந்த ஆக்கிரமிப்பாளர்கள் அதே வழியைத்தான் கடைப்பிடித்தனர். அவர்கள் கொடூரமானவர்களாகவும் நமது மொழி, கலாச்சாரம், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றை வெறுப்பவர்களாகவும் அடக்குமுறையாளர்களாகவும் இருந்தனர். பழிவாங்கும் தன்மையுடனும் கொடுங்கோன்மையுடனும் திகழ்ந்தனர். நமது மொழிகள் வளர முடியாத அளவுக்குத் தடுத்தனர். நமது மொழி தழைக்காவிட்டால் நமது வரலாறு தழைக்காது”** – என்று பேசி இருக்கிறார் இந்திய நாட்டின் துணைக் குடியரசுத் தலைவர் ஜகதீப் தன்கர்.

உண்மையில் நாம் அவருக்கு நன்றி சொல்லியாக வேண்டும். உண்மையைப் பேசியதற்காக! அதுவும், உரக்கப் பேசியதற்காக! அதுவும், இந்தக் காலக்கட்டத்தில் பேசியதற்காக!

**தமிழினத்தை வீழ்த்தவே இந்தி திணிக்கப்படுகிறது, தமிழர் பண்பாட்டை அழிக்கவே இந்தி திணிக்கப்படுகிறது, தமிழை அழிக்கவே இந்தி திணிக்கப்படுகிறது என்று நாம் சொன்னால், அதனை அரசியல் என்று ஒதுக்கித் தள்ளுகிறார்கள் பா.ஜ.க. கைத்தடிகள். ‘ஒரு மாநிலத்தை வீழ்த்த வேண்டுமானால் அதன் மொழியை அழிப்பது தான் சிறந்த வழி’ என்பதையும் சொல்லி, இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் அந்த வழியைத்தான் கடைப்பிடித்தார்கள் என்பதையும் சொல்லி தமிழ்ச் சமுதாயத்துக்கு எச்சரிக்கை மணி அடித்திருக்கிறார் ஜகதீப் தன்கர். இந்தித் திணிப்பை ஏற்றுக் கொள்ளாதீர்கள், இறுதி வரை போராடுங்கள் என்று ‘மறைமுகமாக’த் தூண்டி இருக்கிறார் தன்கர்.**

தமிழ் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இதுபோன்ற மொழிப் படையெடுப்புகளில் சிக்கியே வருகிறது. வடக்கே இருந்து வந்த ஆரியர்கள் தமிழ்நாட்டின் மீது நடத்திய பண்பாட்டுப் படையெடுப்பாக தங்களது வைதீக மதத்தை, வருணக் கோட்பாட்டை இங்கு திணித்தார்கள். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற தமிழர் பண்பாட்டைச் சிதைத்தார்கள். இறைப்பெயர்களை மாற்றினார்கள். இறைவழிபாட்டு முறையை மாற்றினார்கள். தமிழ் இருந்த இடத்தில் சமஸ்கிருதத்தை புகுத்தினார்கள். வேத மறைகளை, தமிழ் மறைகளாக மாற்றினார்கள். சமஸ்கிருதம் தான் தேவபாஷை, தமிழ் நீஷ பாஷை ஆனது. திருக்குறளும் சங்க இலக்கியங்களும் இருந்த இடத்தில் வேத இலக்கியங்களைக் கொண்டு வந்து உட்கார வைத்தார்கள். சங்க இலக்கிய ஓலை சுவடிகள் ஆண்டுதோறும் தீ வைத்து கொளுத்தப்பட்டது.

பல்லவர் ஆட்சியில் வடமொழி ஆதிக்கமே மேலோங்கியது. மகேந்திரவர்மப் பல்லவ மன்னர், ‘மத்தவிலாசப் பிரகசனம்’ என்ற தலைப்பில் வடமொழியில் தான் நாடக நூலை எழுதினார். விஜயநகரப் பேரரசு காலத்தில் தெலுங்கு கோலோச்சியது. இசைத்துறையில் தெலுங்கு முழுமையாக நுழைந்த காலம் இது. இன்று வரை தமிழ்நாட்டு இசை மேடைகளை ஆட்சி செய்கிறது. மராத்திய மன்னர்கள் ஆளுகையில் அந்த மொழியும் உள்ளே வந்து சில பகுதிகளில் பரவியது. மொகலாயர்கள், நவாப்புகள் ஆட்சியில் நிர்வாகத் துறையில் பாரசீக, அரபியச் சொற்கள் நுழைந்தன. ஜில்லா, தாலுக்கா, ஜாமீன், வாய்தா, வக்காலத்து ஆகியவை அப்போது நுழைந்தவைதான். அடுத்து வந்த பிரிட்டிஷ் ஆட்சியானது ஆங்கிலத்தை முழுமையாகக் கொண்டு வந்து புகுத்தியது.

இவர்கள் யாருடைய ஆட்சியாக இருந்தாலும் ‘சமஸ்கிருத’ ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்ட ஆட்சியாக நடத்தினார்கள். ‘உள்ளூர் விவகாரங்களில் தலையிடுவது இல்லை’ என்ற கொள்கையானது சமஸ்கிருத – வேத மரபுக்கு வசதியாகப் போனது. மாற்று மொழியினர் – மாற்று மதத்தவர் – மாற்றுப் பண்பாட்டவர் படையெடுப்பானது தொடர்ந்து நடந்து வந்துள்ளது. அதனால்தான் தமிழ் புறக்கணிக்கப்பட்டது.

சிந்துச் சமவெளி நாகரிக காலத்தில் (கி.மு.3000 – 1500) இந்தியா முழுவதும் பரவியிருந்தது தமிழ். கி.மு. 1500 ஆம் ஆண்டில் இந்தோ – ஆரிய மொழி பேசுவோர் இந்திய நாட்டுக்குள் நுழைந்த பின்னால் தமிழின் பரப்பானது தெற்குப் பகுதியில் மிகமிகச் சுருங்கியதை உணர வேண்டும். வடபகுதியில் இருந்த மொழிகள் அனைத்தையும் இந்தோ – ஆரிய மொழி உள்வாங்கிவிட்டது. அதனால் உள்வாங்க முடியாதது தமிழ் மட்டும் தான். ஏனென்றால் சமஸ்கிருத மரபு வேறு. தமிழ் மரபு வேறு. சமஸ்கிருதம் இல்லாமல் தனித்தியங்கும் தன்மை தமிழுக்கு மட்டுமே உண்டு. இதனை முதலில் மெய்ப்பித்து எழுதியவர் கால்டுவெல். அதனால்தான் கால்டுவெல் மீது இனப்பகையோடு இழிசொற்களைப் பாய்ச்சுகிறார்கள்.

‘சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்த இந்துஸ்தானியைக் கற்றுக் கொள்ளுங்கள்’ என்றார் காந்தி. ‘இந்தி கற்றுக் கொடுத்தால் 15 ஆண்டுகளில் இந்தியா, இந்தி நாடாக மாறிவிடும்’ என்று எடுத்துக் கொடுத்தார் சத்தியமூர்த்தி. ‘இந்தியைக் கற்றுக் கொண்டால் சமஸ்கிருதம் படிப்பது எளிது’ என்று சட்டமன்றத்தில் சொன்னார் அன்றைய முதலமைச்சர் இராஜாஜி. ‘இந்தி வேலைக்காரியாக இருக்கட்டும்’ என்றார் இராஜாஜி. அதனால்தான் பெரியார் இந்த மொழித் திணிப்பை எதிர்த்தார். ‘இந்தியால் தமிழ் அழியாது, தமிழ்ப் பண்பாடு அழிந்து போகும்’ என்றார் பெரியார். **“வயிற்றுப் பிழைப்புக்காக தென்னாட்டில் புகுந்த ஆரியர்கள் மதத்தின் பேரால், கடவுள் பேரால் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி விட்டது போல இன்று வேலைக்காரியாக வரும் ஹிந்தி நாளைத் தமிழ் நாட்டரசி ஆவது நிச்சயம்”** என்று தமிழர்களைத் தட்டி எழுப்பியவர் பெரியார்.







தலைமைச் செயலகத்தில் நேற்று (24.02.2025) பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் ஆகியோர் அரசு ஊழியர் சங்கங்களின் கோரிக்கைகள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இக்கூட்டத்தில் பல்வேறு தமிழ்நாடு அரசு அலுவலர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மருந்தகம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

மானியமாக வழங்கப்படுகிறது. உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ரொக்கமாகவும், மருந்துகளாவும் வழங்கப்பட்டிருக்கிறது.

அத்துடன், முதல்வர் மருந்தகங்களுக்கு தேவைக்கு ஏற்ப உடனடியாக அனுப்புகின்ற வகையில் மாவட்ட மருந்து கிடங்குகளில் மூன்று மாதத்திற்குத் தேவையான மருந்துகளின் இருப்பு பராமரிக்கப்படுகிறது. சாலிகிராமத்தில், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தால் மத்திய மருந்து கிடங்கு அமைக்கப்பட்டிருக்கிறது! 38 மாவட்டங்களில், மாவட்ட மருந்து கிடங்குகள் அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட மருந்து கிடங்குகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளான ஏசி, குளிர் சாதனப்பெட்டி, ரேக்குகள் மற்றும் கணினி என்று எல்லா வசதிகளும் அமைக்கப்பட்டிருக்கிறது!

### 48 மணி நேரத்தில், மருந்துகள் அனுப்பி வைப்பு!

மருந்து தேவைப் பட்டியல் பெறப்பட்ட 48 மணி நேரத்தில், மருந்துகளை வாகனங்கள் மூலம் இந்த முதல்வர் மருந்தகங்களுக்கு அனுப்பி வைக்க வசதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது! முதல்வர் மருந்தகங்கள் சிறப்பாக பணியாற்றும் வகையில் மருந்தாளுநர் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு மூன்று கட்டமாக பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கிறது! இதனால், B.Pharm, D.Pharm படித்த ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது!

இந்த முதல்வர் மருந்தகங்களில் சிறப்பு என்னவென்று கேட்டால், இங்கு பொது மக்களுக்கு 25 விழுக்காடு வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. இதனால், தனியார் மருத்துவமனைகளுக்கு செல்லும் பொதுமக்களுக்கு, அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற பாதிப்புக்கு ஆளாகியிருக்கக்கூடியவர்களுக்கு மருந்துகளை குறைந்த விலையில் முதல்வர் மருந்தகங்களிலேயே வாங்கி பயன்பெற முடியும்.

### அமைச்சர் பெரியகருப்பனுக்கு மனமார்ந்த பாராட்டு!

இந்தத் திட்டத்தை மிகச்சிறப்பாக செயல்படுத்திக் காட்டியிருக்கும் கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் அவர்களுக்கும், துறையின் அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் செய்திருக்கும் பணி, உயிர்காக்கும் பணி! அதனால் தான் வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!

நான் முன்பே சொன்னது போன்று, திராவிட மாடல் அரசு என்பது, சாதாரண, சாமானிய மக்களின் நன்மைக்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி வரக்கூடிய அரசு! நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, கொரோனா என்கின்ற பெரும் நோய்த்தொற்று பரவியிருந்த காலம்! அப்போது மக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு பல சிறப்பு முயற்சி களை எடுத்தோம். வாரந்தோறும் மாபெரும் தடுப்பூசி முகாம்கள் நடத்தி, எந்தளவுக்குச் சிறப்பாக செயல்பட்டு கோவிட் பெருந்தொற்றை கட்டுப்படுத்தினோம் என்று உங்களுக்கு நன்றாக தெரியும்!

### ஓராண்டிற்குள் 2 தவணை தடுப்பூசிகள்!

நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தப்போது, தடுப்பூசிக்கு தகுதியானவர்களில் 8.09 விழுக்காடு மக்களுக்காகதான் முதல் தவணை தடுப்பூசியும், 2.84 விழுக்காடு மக்களுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசியும் போடப்பட்டிருந்தது. ஆனால், நம்முடைய சீரிய முயற்சி களால், ஏழே மாதங்களில் இந்த நிலையை மாற்றி, 86.95 விழுக்காடு மக்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 60.71 விழுக்காடு மக்களுக்கு இரண்டாவது தவணை தடுப்பூசியும் என்று 8 கோடியே 55 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டது! ஓராண்டுக்குள் எல்லோரும் இரண்டு தவணை தடுப்பூசியும் போட்டு, பூஸ்டர் தடுப்பூசியும் போட்டு மக்களை காப்பாற்றினோம்!

கொரோனாவால் பாதித்தவர்களை காப்பாற்ற, துணையாக நம்முடைய அரசு இருக்கிறது என்று உணர்த்த நானே கோவைக்குச் சென்றபோது, கொரோனா வார்டுக்குள் சென்றேன். இந்தத் துறையின் அமைச்சராக இருக்கக்கூடிய மா.சு மட்டுமல்ல; அமைச்சரவையில் இருக்கக்கூடிய அத்தனை அமைச்சர்களும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்களாக செயல்பட்டதை நாடே பார்த்தது! இந்த அடிப்படையில் இருந்து உருவானதுதான், மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்!

> **வறுமையின்மை, பட்டினி ஒழிப்பு, தரமான கல்வி, பாலினச் சமத்துவம், தூய்மையான குடிநீர் குறைந்த விலையில், வேலைவாய்ப்பு, பொருளாதார குறியீடு, தொழில் உட்கட்டமைப்பு, சம வாய்ப்புகள், அமைதி, மருத்துவம், மக்கள் நல்வாழ்வு நுகர்வு உற்பத்தி என்று எல்லா குறியீடுகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது.**

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, திருச்சியில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் பத்தாண்டுகளுக்கான தொலைநோக்கோடு ஏழு உறுதிமொழிகள் வழங்கினேன்! அதில் ஒன்றுதான், “அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்ந்த மருத்துவம்!” அந்த தொலைநோக்கின் ஒரு பகுதிதான், “மக்களைத் தேடி மருத்துவம்!”

### மக்களைக் காக்க பல்வேறு திட்டங்கள்!

மருத்துவமனைகளை தேடி மக்கள் செல்லும் சூழலை மாற்றி “மக்களைத் தேடி மருத்துவம்” செல்லும் காலத்தை உருவாக்கி இருக்கிறோம். இரண்டு கோடிக்கும் அதிகமான மக்களுக்கு இந்தத் திட்டத்தில் சிகிச்சை வழங்கியிருக்கிறோம்!

இதே போலத்தான், “பாதங்களைப் பாதுகாப்போம்”, “இதயம் காப்போம்” “இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48” என்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, ஏராளமான மக்களின் உயிரையும், உடல்நலத்தையும் பாதுகாக்கிறோம்! குழந்தைகள், மாணவர்கள், மகளிர், இளைஞர்கள், முதியவர்கள் என்று ஒவ்வொரு மக்களின் தனித்தனி தேவைகளை உணர்ந்து, பார்த்து, பார்த்து செய்து தருகிறோம்! இந்த அணுகுமுறையால்தான் சமூக வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இன்றைக்கு வளர்ந்து கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறது!

வறுமையின்மை, பட்டினி ஒழிப்பு, தரமான கல்வி, பாலினச் சமத்துவம், தூய்மையான குடிநீர் குறைந்த விலையில், வேலைவாய்ப்பு, பொருளாதார குறியீடு, தொழில் உட்கட்டமைப்பு, சம வாய்ப்புகள், அமைதி, மருத்துவம், மக்கள் நல்வாழ்வு நுகர்வு உற்பத்தி என்று எல்லா குறியீடுகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது.

இதெல்லாம் நமக்கு நாமே வாசித்துக்கொள்ளும் பாராட்டுப் பத்திரங்கள் கிடையாது... ஒன்றிய அரசின் நிதி ஆயோக் புள்ளிவிவரங்களே சொல்கிறது... நாட்டிற்கே முன்மாதிரியாக வழிகாட்டியாக இருக்கக்கூடிய

- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்
- விடியல் பயணம்
- புதுமைப்பெண்
- தமிழ்ப்புதல்வன்
- காலை உணவுத் திட்டம் என்று முற்போக்கான தொலைநோக்கான நாட்டுக்கே முன்னோடியான அத்தனை திட்டங்களையும் பல்வேறு நிதி நெருக்கடிகளுக்கு இடையில் தான் செயல்படுத்தி வருகிறோம்!

மத்திய அரசு என்று சொல்லிக்கொள்ளும், ஒன்றிய அரசின் நெருக்கடி இருந்தாலும், அந்த நெருக்கடிக்களுக்கு மத்தியிலும், அது பற்றி கவலைப்படாமல் தமிழ்நாட்டு நலன்களை மட்டுமே மனதில் வைத்துக் கொண்டு, தமிழ்நாட்டு மக்கள் மேல் நம்பிக்கை வைத்து இந்த திட்டங்களை நாங்கள் இன்று செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம்! இது எல்லாவற்றையும் மக்களுக்கான நம்முடைய கடமை என்று உணர்ந்து செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம்!

மக்களுக்கு நன்மை செய்வதில் நாம் கணக்கு பார்ப்பதில்லை! இந்த நேரத்தில் நான் அரசு அதிகாரிகளுக்கு சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த முதல்வர் மருந்தகங்கள் என்ன நோக்கத்திற்காக தொடங்கப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கம் கொஞ்சம் கூட சிதையாமல் இன்னும் சிறப்பாக செயல்படுத்துகின்ற அந்த உறுதியை நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இப்போது திறக்கப்பட்டிருக்கும் ஆயிரம் மருந்தகங்கள் என்பது, முதல் கட்டம்தான்... அடுத்தடுத்த கட்டங்களில், இந்த எண்ணிக்கையை அதிகரிக்கப் போகிறோம்... ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் மருந்து கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, இந்தத் திட்டத்திற்கு மற்றொரு நோக்கமும் இருக்கிறது. B.Pharm, D.Pharm படித்த இளைஞர்களை சொந்தமாக தொழில் தொடங்குவதற்கான அடித்தளம் அமைப்பதுதான் அந்த நோக்கம்!

நான் முதல்வனால், இளைஞர்களின் திறன் வளர்க்கும் நம்முடைய திராவிட மாடல் அரசு இது போன்ற திட்டங்களால் இளைஞர்களை தொழில் முனைவோர்களாக்கி வருகிறது. நாம் உருவாக்கும் வாய்ப்புகளால் நமது இளைஞர்கள் உயர்வார்கள்; நமது திட்டங்களால் வளமான நலமான தமிழ்நாடு நிச்சயம் உருவாகும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




முதலமைச்சர் அவர்கள் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக கலையரங்கில் முதல்வர் மருந்தகங்களை காணொலிக்காட்சி வாயிலாக தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளில் முதல்வர் மருந்தகத்தினை நேற்று (24.02.2025) தொடங்கி வைத்ததை தொடர்ந்து உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மருந்தகத்தினை பார்வையிட்டார். மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), க.அன்பழகன் (கும்பகோணம்), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ்.விஜயன், கும்பகோணம் மாநகராட்சி மேயர் க.சரவணன், துணை மேயர் சுப.தமிழழகன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் செல்வி.தமிழ்நங்கை மற்றும் பலர் உடனுள்ளனர்.